පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 212

ආයතනයේ නම : ජාතික මැණික් සහ ස්වර්ණාභරණ අධිකාරිය

පාර්ලිමේන්තුවේ පොදු ව්‍යාපාර පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 120 (4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 212

நிறுவனத்தின் பெயர் : தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 120 (4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series No : 212

Name of the Institution : National Gem And Jewellery Authority

Submission of observations of the Hon. Minister In charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Enterprises in terms of Standing Order No. 120 (4).

இலங்கை பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இல. 120 (4) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

பாராளுமன்ற கூட்டத் தொடர் இல. 212

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

தொடர் இல.	கூட்டத் தொடர் இல. 212 பரிந்துரை இல.	குழுப் பரிந்துரை		அமைச்சால் / நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய முன்னேற்றம்
01	**01**	**அதிகாரசபையின் கட்டமைப்பு** **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு:**		
		I	இரத்தினக்கல் வர்த்தக வங்கி எனும் பெயரில் ஓர் நிறுவனம் இன்மையால் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைச் சட்டத் திருத்தத்தின் போது இது தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல்.	அரசாங்கத்திற்கு உரித்தான வர்த்தகமயமாக்கப்படாத நிறுவனம் தொடர்பான மீளாய்வு அறிக்கையை சமர்ப்பிப்பது தொடர்பான அமப/25/0288/802/005 ஆம் இலக்க 2025 மார்ச் 25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி நிறுவன மறுசீரமைப்புச் செயற்பாட்டில் மேற்கொள்ளப்படுவதற்குள்ள சட்டத்திருத்தத்தின் போது தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு உரித்தான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பாகவும் கவனத்திற்கொண்டு சட்டத்திருத்தத்தை மேற்கொள்வதற்கு
		II	இது வரையில் இரத்தினக்கல் வர்த்தக வங்கி என ஓர் நிறுவனம் ஸ்தாபிப்பதற்கான	

			தேவைப்பாடு ஒன்று உள்ளதா என்பது குறித்த விடயத்தை கருத்திற்கொள்ளல்.	தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 2025.07.14 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 01) மேற்குறித்தவாறு நடவடிக்கை எடுப்பதாக 2025.07.14 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஓர் பிரதியுடன் குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. (இணைப்பு 02)
		III	சுங்கத் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிரதிநிதித்துவத்தை பணிப்பாளர் சபைக்கு நியமிப்பதை விரைவுபடுத்துதல்.	இலங்கை மத்திய வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தி 2025.03.07 ஆம் திகதி முதல் ஈ.எச். மொஹொட்டி அவர்களும் சுங்கத் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 2025.03.20 ஆம் திகதி முதல் ஏ.டபிள்யூ. எஸ்.ஐ. சில்வா அவர்களும் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (இணைப்பு 03 மற்றும் 04)
		IV	இந்தப் பரிந்துரையை ஒரு மாதத்திற்குள் (2025.04.05 ஆம் திகதிக்கு முன்னர்) செயற்படுத்தி இது தொடர்பான அறிக்கை ஒன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒரு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பித்தல்.	மேற்குறித்த வகையில் செயற்பட்டதாக 2025.07.21 திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒரு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 05)

02	02	**மூலோபாயத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு**		
		I.	இலங்கையின் புதிய தேசிய கொள்கைகள் மற்றும் தற்போதுள்ள பொருளாதார, சமூகத் தேவைப்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தேவைப்பாடுகளுக்கு ஏற்ப புதுப்பிக்கப்பட்ட ஓர் கூட்டமைப்புத் திட்டத்தையும், ஓர் மூலோபாயத் திட்டத்தையும், ஓர் செயற்பாட்டுத் திட்டத்தையும் தயாரித்தல்.	2025 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் குழுவின் ஒப்புதல் 30.01.2025 திகதிய பணியாளர் அறிக்கை இல. 2572 இன் மூலம் பெறப்பட்டுள்ளது. (இணைப்பு இல. 06) அதிகாரசபையின் 2025-2029 ஆம் ஆண்டுகளுக்கான புதிய கூடமைப்புத் திட்டமும் மூலோபாயத் திட்டமும் தேசிய கொள்கைகள் மற்றும் தற்போதைய பொருளாதார, சமூகத் தேவைகள் மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ப புதுப்பிக்கப்பட்டு, இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் விருத்தி, மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை தொடர்பான விடயங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டு இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் தற்போதைய பிரச்சினைகளுக்கு உரிய நேர்மறையான பதில்களை எட்டக்கூடியவகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், இப் புதிய கூட்டமைப்புத் திட்டத்தின் மூலம் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறைக்காகவும் அதிகாரசபையால் வழங்கப்படும் சேவைகளுக்காக புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக, பணிப்பாளர் குழு அங்கத்தவர்களின், அதிகாரசபையின் உயர் முகாமைத்துவ மற்றும் அனைத்து துறைத் தலைவர்களின் பங்கேற்புடன்
		II.	இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் விருத்தி, மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை தொடர்பான சகல துறைகளுக்கும் உரிய விடயம் குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்துதல்.	
		III	இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறைக்கு புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டு வருவதில் கவனம் செலுத்துதல்.	
		IV	தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு ஓர் கூட்டமைப்புத் திட்டத்தையும்,	

			ஓர் மூலோபாயத் திட்டத்தையும், ஓர் செயற்பாட்டுத் திட்டத்தையும் தயாரிக்கையில் நிறுவனத்திலேயே உரிய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.	இரண்டு நாட் செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டு ஆரம்ப வரைவு தயாரிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட மூலோபாயத் திட்டம் (2025 – 2029 எதிர்வரும் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டு அதன் ஒப்புதலைப் பெற்ற பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒரு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுவதற்குள்ளது.
		V	இது குறித்த அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒரு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பித்தல்.	
03	03	**இயக்குநர்கள் குழு கூட்டங்களை நடத்துதல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு**		
		I.	பணிப்பாளர் சபைக் கூட்டங்களை மாதத்திற்கு ஒரு முறையேனும், தேவையேற்படின் ஆகக் கூடுதலாக பல முறை நடத்துதல்.	2025 ஆம் ஆண்டில், இதுவரை 07 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முழு அறிக்கைகளும் ஆண்டின் இறுதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒரு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது.
		II.	ஆண்டு இறுதியில் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை குறித்த அறிக்கையை, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒரு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பித்தல்.	

04	04	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள்** **கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு**		
		I	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் குறைந்தபட்சம் ஒரு காலாண்டிற்கு ஒரு முறையேனும் தேவையேற்படின் பல முறை நடத்தப்பட வேண்டும்.	முதல் காலாண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2025.04.03 அன்றும், இரண்டாம் காலாண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2025.07.14 அன்றும் நடத்தப்பட்டுள்ளது. முழு அறிக்கையும் ஆண்டு இறுதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.
		II.	ஆண்டு இறுதியில் நடத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்ட எண்ணிக்கை தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒரு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பித்தல்.	
05	05	**பதவியணி** **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும்**		
		I	தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் சட்டப் பிரிவின் வெற்றிடத்தை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.	சட்டத் துறையில் உள்ள 04 வெற்றிடங்களுக்கு மேலதிகமாக மேலும் 19 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்காக அரச சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையை மீளாய்வு செய்து பதவியணி

				முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 2025.03.12 ஆம் திகதி ஓர் கடிதம் வரிசை அமைச்சின் மூலம் குறித்த குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 07) இது தொடர்பான கலந்துரையாடல் 2025.06.18 ஆம் திகதி அன்று பிரதமர் செயலகத்தில் நடைபெற்றது. மேற்குறித்த அங்கீகாரம் பெறப்படும் வரை நிறுவனத்தின் செயல்பாடுகளை தாமதமின்றி செயற்படுத்துவதற்காக, அரச நிதிச் சுற்றறிக்கை 1/2020 இன் படி பணி ஒப்படைப்பு அடிப்படையில் 04 சட்ட அதிகாரிகளின் சேவை பெறப்பட்டிருந்தன. (இணைப்பு 08)
		II.	அரசு நிறுவனங்களை ஒன்றிணைப்பதன் கீழ் இந் நிறுவனத்தை வேறு நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட பின்னரும் அவசியமான பதவிகளை அடையாளம் கண்டு, அந்தப் பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.	பொது முயற்சிகளை ஒன்றிணைப்பதன் கீழ் இவ் இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் ஒன்றிணைக்கும் செயற்பாடுகளுக்கு மேலதிக செயலாளர் (காலாச்சார கைத்தொழில் அபிவிருத்தி) அவர்களின் தலைமையில் ஓர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 09). அக் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு இவ் இரு நிறுவனங்களும் ஒன்றிணைகையில் அத்தியாவசியமான பதவிகளை இனங்கண்டு அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.
		III.	தொடர்புடைய அதிகாரிகளை சம்பந்தப்பட்ட பதவிகளில் நியமித்து, அந்த நடவடிக்கைகள்	சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப் பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் தொடர்புடைய பணிப் பட்டியல்களின்

			முறையாக மேற்கொள்ளப்படுவது குறித்து கண்காணித்தல்.	படி பணி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது குறித்து வருடாந்த மீளாய்வொன்று மேற்கொள்ளப்படுவதற்காக தயாரிக்கப்பட்ட செயல்திறன் மதிப்பீட்டு முறையின் மூலம் கண்காணிக்கப்படுகிறது.
		IV	இது குறித்த அறிக்கை ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒரு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பித்தல்.	இது தொடர்பான குறித்த அறிக்கை 2025.07.23 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 10)
06	**06**	**சட்டத் திருத்தம்**		
		பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும்		
		I	அரசு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு குறித்த இறுதி முடிவின் படி, 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைச் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.	அரசாங்கத்திற்குச் சொந்தமான வணிக சார்பற்ற நிறுவனங்கள் குறித்த மீளாய்வு அறிக்கையை சமர்ப்பித்தல் என்ற தலைப்பில் உள்ள 2025 மார்ச் 25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மான இல. அமப/25/0288/802/005 இன் படி நிறுவனங்களை மறுசீரமைக்கும் செயற்பாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டத் திருத்தத்தில், தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு உரித்தாக அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, சட்டத்தைத் திருத்துவதற்குத் தேவையான தொடர் நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 2025.07.14 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 01)

		II.	தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் என இரண்டு பதவிகளை உருவாக்குவதற்கு இயலுமான வகையில் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் 8 (6) பிரிவைத் திருத்துதல்.	மேற்கண்டவாறு நடவடிக்கை எடுப்பதாக 2025.07.14 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 02)
		III.	இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணத் துறையின் அபிவிருத்தி, மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை மூலம் தொழில்துறையில் சிறந்து விளங்குவதற்காகவும் சகல விதத்திலும் சுற்றுச்சூழலைத் தடுப்பதற்காகவும் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய (புவியியல் மற்றும் சுரங்க அகழ்வு, வனவிலங்கு, வனப் பாதுகாப்பு, குடிநீர் முகாமைத்துவ நிறுவனங்கள், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, விவசாயம், ... போன்ற) அனைத்து நிறுவனங்களையும் இனங்கண்டு அத் துறைகளின் பிரதிநிதித்துவத்துடன் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கு 1993 இன் 50 ஆம்	

			இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் திருத்தத்தின் போது தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.	
		IV.	1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டம் பற்றிய விரிவான அறிவை அனைத்து அதிகாரிகளுக்கும் வழங்கி அவர்கள் அதைப் பற்றி அறிந்தமை குறித்த தகவல்கள் அதிகாரசபையில் பேணப்படுதல்.	நிறுவனத்தின் அனைத்துப் பிரிவு அதிகாரிகளுக்கும் இச் சட்டம் குறித்து அறிவூட்டுவதற்கும் அவர்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளைப் பெறுவத்காக 2025.03.11 ஆம் 2025.03.19 ஆம் திகதிகளில் ஒரு கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.
07	**07**	**இரத்தினக்கல் துறையில் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் செயற்பாடு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு**		
		I	மீபகமாவில் உள்ள கபெல்ல கங்கோவிட்ட எனும் காணி தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட இரத்தினக்கல் அகழ்விற்கான உரிம விண்ணப்பத்தை வழங்குவது தொடர்பான அமைச்சின் மேல்முறையீட்டு அதிகாரத்தைப் பயன்படுத்துகையில், அவ் உரிமத்தை வழங்குவதற்கு தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை மறுத்தமைக்குக் காரணமான விடயங்கள், மேல்முறையீட்டுக் குழுவால் முறையாகக் கருத்திற்கொள்ளப்பட்டதா எனவும்	குறித்த அறிக்கை 2025.03.18 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 11)

			ஆட்சேபனை இன்றி உரிமங்கள் வழங்கப்பட்டதா என்பது குறித்தும் ஓர் அறிக்கை 02 வாரங்களுக்குள் (2025.03.19 ஆம் திகதிக்கு முன்னர்) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.	
		II	தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையால் உரிமங்களை வழங்குவதற்கும் உரிம காலத்தை நீடிப்பதற்கும் நிராகரிக்கப்பட்டிருப்பின் அமைச்சின் செயலாளர் தலைமையிலான மேல்முறையீட்டுக் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பின் அது குறித்த ஓர் அறிக்கையை 02 வாரங்களுக்குள் (2025.03.19 இற்கு முன்) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.	
			கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு :	
		III	உரிமக் கோரிக்கைகளுக்கான ஆட்சேபனைகள் தொடர்பான அறிவிப்புகளை உரிய காலக்கெடுவிற்குள் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் அலுவலகங்களிலும் பிரதேச செயலகங்களிலும்	உரிமங்கள் வழங்குவது தொடர்பான விளம்பரங்களை வெளியிடுவதற்கும், காட்சிப்படுத்துவதற்கும் உரிமங்கள் வழங்கப்படும் காணிக்கு மேலதிகமாக காணி உள்ள பிரதேச செயலகப் பிரிவிலும், காணி அமைந்துள்ள கிராம அலுவலர் அலுவலகத்திலும் வெளியிடப்படுவதற்கு

			காட்சிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு இது முறையாக மேற்கொள்ளப்படுகின்றதா என்பது குறித்து கண்காணித்தல்.	அனைத்து பிராந்திய முகாமையாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதற்கு 2025.03.18 ஆம் திகதி நடவடிகை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையில் மாவட்டச் செயலகங்களிலும் இந்த விளம்பரங்கள் வெளியிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
08	**08**		இரத்தினக்கல் இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி	
			கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு :	
		I.	இலங்கை சுங்கத்தின் மூலம் 2022, 2023 மற்றும் 2024 ஆகிய மூன்று ஆண்டுகளில் மொத்தம் 46,815.94 கிலோ கிராம் அளவான ரூபா. 2,091,693,980 மதிப்புள்ள இரத்தினங்களை இறக்குமதி செய்திருத்தல், இவ் இறக்குமதி மூலம் சமூக பாதுகாப்பு வரியாக ரூபா 15,614,849 தொகையும் பெறுமதி சேர் வரியாக ரூபா 38,616,009 தொகையும் (2024 இல்), அறவிடப்பட்டிருந்தமை, இந்த மூன்று ஆண்டுகளில் ரூபா. 10,723,623 மதிப்பு கூட்டப்பட்ட ரூ. 22,523,409 மதிப்புள்ள 1,664.06 கிலோ இரத்தினங்கள் மட்டும் அதிகாரசபையூடாக மீள் ஏற்றுமதி செய்திருந்தமை தொடர்பான ஓர்	இலங்கை சுங்கத் தரவுகளின் படி, இறக்குமதி செய்யப்பட்ட 46,815.94 கிலோகிராம் இரத்தினக் கற்களில், 7,500 கிலோகிராம் மிகக் குறைந்த தரம் வாய்ந்த ரபாஹா வகை கரடுமுரடான இரத்தினக் கற்கள் 2023 ஆம் ஆண்டிலும், 22,000 கிலோகிராம் 2024 ஆம் ஆண்டிலும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளன. இந்த அசாதாரண இரத்தினக்கற்களின் இறக்குமதி அளவுகள் குறித்து தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையால் இறக்குமதியாளர்களிடமிருந்து அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் இந்த கரடுமுரடான இரத்தினக் கற்கள் மிகவும் குறைந்த தரம் வாய்ந்த ரபாஹா இரத்தினக் கற்கள் என இது தொடர்பான கள ஆய்வில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களால் பௌதீக ரீதியாக அவதானிக்கப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டிருந்தது.

			அறிக்கையை 01 மாதத்திற்குள் (2025 04.05 இற்கு முன்) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.	இது குறித்த அறிக்கை 2025.07.23 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 12)
		II.	இரத்தினக் கற்களை இறக்குமதி செய்கையிலும் மீள் ஏற்றுமதி செய்கையிலும் அதிகாரசபை முறையான ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறியமையால் இறக்குமதி செய்யப்பட்ட இரத்தினக்கல் பெறுமதியில் அறவிடப்படும் வரியைக் கணிப்பிடுவதற்கும் ஏற்றுமதி செய்யப்பட்ட இரத்தினக்கல் பெறுமதியையும் அதன் மீது அறவிடப்பட வேண்டிய வரியை அறவிடுவது தொடர்பாகவும் கருத்திற்கொள்ளுதல்.	1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் மூலம் அனைத்து இரத்தினக் கற்களின் ஏற்றுமதிகளும் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இரத்தினக் கற்கள் இறக்குமதி தொடர்பாக சட்டத்தில் குறிப்பிட்ட ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டிராமையால் எதிர்வரும் சட்டத் திருத்தச் செயல்பாட்டில் இது தொடர்பாகச் செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை, குழுவின் பரிந்துரைகளின் படி, அந்த செயல்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் 2025.05.30 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. (இணைப்பு 13) இதற்கு மேலதிகமாக 2025.03.10 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், இரத்தினக் கற்களை இறக்குமதி செய்யும் போது அதிகாரசபையால் வழங்கப்பட்ட செல்லுபடியான வர்த்தக உரிமத்தை இறக்குமதியாளர் கொண்டிருக்கிறாரா என்பது குறித்து பரீட்சிப்பதற்காக இலங்கை சுங்கத்

				திணைக்களத்தை அறிவூட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 14)
09	**09**	**இரத்தினக்கல் ஏற்றுமதியின் போது அறவிடப்படும் ரூபா 3,500 கட்டணம்** **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு**		
		I	இது தொடர்பான விடயங்களை ஆராய்ந்தறிந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு ஓர் அறிக்கையை ஒரு மாதத்திற்குள் (2025.04.05 ஆம் திகதிக்கு முன்னர்) சமர்ப்பிக்க வேண்டும்.	இது தொடர்பான குறித்த அறிக்கை 2025.07.23 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 15)
10	**10**	**இரத்தினக்கல் இறக்குமதி** **கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு**		
		I	இரத்தினக் கற்களை இறக்குமதி செய்கையில் ஓர் ஒழுங்குமுறையை மேற்கொள்வதற்கு ஒரு முறையான நடைமுறையை உருவாக்கி தொடர்ந்து செயற்படுத்தி இது தொடர்பான அறிக்கையை 01 மாதத்திற்குள் (2025.04.05 ஆம் திகதிக்கு முன்) கணக்காய்வாளர் தலைமை	இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் 2025.05.30 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இரத்தினக் கற்கள் இறக்குமதி தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 13) இதற்கு மேலதிகமாக 2025.03.10 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இரத்தினக் கற்கள் இறக்குமதி செய்கையில்

			அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.	அதிகாரசபையால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் வர்த்தக உரிமத்தை இறக்குமதியாளர் கொண்டிருக்கிறாரா என்பதை பரீட்சிப்பதற்காக இலங்கை சுங்கத் திணைக்களத்தை அறிவூட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 14) இது தொடர்பான குறித்த அறிக்கை 2025.07.23 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 16)
11	**11**		**தங்க இறக்குமதி** **கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு**	
		I	தங்க இறக்குமதி, தேசிய இரத்தினக் கல், ஆபரண அதிகாரசபையின் ஒழுங்குமுறைகளுடன் இணக்கம் /இணக்கமின்மை மற்றும் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த ஓர் அறிக்கை 01 மாதத்திற்குள் (2025.04.05 ஆம் திகதிக்கு முன்) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.	1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் படி மூலப்பொருளாக தங்கத்தை இறக்குமதி செய்வது அல்லது ஏற்றுமதி செய்வது அதிகாரசபையின் செயற்பணிக்கு உள்ளடங்க மாட்டாது. இலங்கைக்கு தங்கம் இற்குமதி செய்யப்படுவதற்கான அனுமதி இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தால் அதற்காக விநியோகிக்கப்பட்ட 2021.06.11 ஆம் திகதிய 2023/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலமாகும். வழங்கப்படுகின்றது. இது தொடர்பாக குறித்த அறிக்கை 2025.07.23 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 17)

12	**13**	**இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையும் அவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானம்** **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும்**		
		I.	இவ் இரத்தினக்கல் பையை விடுவிப்பது தொடர்பாக ஒரு சுயாதீன விசாரணைக் குழுவை நியமித்து விசாரணை ஒன்றை நடத்தி பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் கண்டு தேவையான மேலதிக நடவடிக்கைகளை எடுத்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் 01 மாதத்திற்குள் (2025.05.04 ஆம் திகதிக்கு முன்) குழுவிடம் ஓர் அறிக்கையை சமர்ப்பித்தல்.	ஷாகுல் ஹமீத் முகமது நிஸாம் என்பவரால் இயக்கப்படும் எலெக்னட் ஜெம்ஸ் நிறுவனத்தால் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையால் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பாஷாணத்திற்கு உரிய மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல் ஆவணங்களில் ஏற்றுமதிக்கு குறைவான பெறுமதி ஒன்று குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மோசடி தொடர்பான வழக்கின் விசாரணையைத் தொடர்ந்து, இவ் இரத்தினக் கல்லை விடுவிக்கப்பட்ட விவகாரத்திற்கு உரிய விசாரணையை நடத்துவதற்காக 2025.03.12 ஆம் திகதி 5 பேரை அங்கத்தவர்களாகக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. (இணைப்பு 18) சம்பந்தப்பட்ட குழு அறிக்கை 2025.06.30 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 19) குறித்த குழு அறிக்கையின் பரிந்துரைகளின் படி தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை எடுப்பதற்காக நிறுவனத்திற்கு 202506.30 அன்று அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (இணைப்பு 20)

				குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய பரிந்துரைகள் குறித்து இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையால் 2025.07.24 ஆம் திகதி I.B.Reference 01 எனும் இலக்கத்தில் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு 21) மேற்கூறிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுக்க மற்றும் நிர்வாகப் பரிந்துரைகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக அடுத்துவரும் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.
13	**14**	**இரத்தினக் கல் மற்றும் தங்க ஏற்றுமதியிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுப் பணப் பரிமாற்றங்களின் அளவு** **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும்**		
		I	ஏற்றுமதி வருமானத்தை நாட்டிற்குள் கொண்டு வருவதற்கான ஒழுங்குமுறை பொறிமுறையை செயற்படுத்தும் போது, ஏற்றுமதியாளர்களின் வணிக வங்கிகள் நேரடியாக அதிகாரசபைக்கு உண்மையான பணப் பரிமாற்றத் தகவலை வழங்காமை மற்றும் உண்மையான விற்பனைப்	ஏற்றுமதியாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட விசேட அனுமதிப்பத்திரம் ஒன்று இல்லாததுடன் தற்போது இரத்தினக்கல் வர்த்தக உரிமத்தைப் பயன்படுத்தி ஏற்றுமதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான அனுமதி வழங்கப்படுகிறது.

			பெறுமதியை ஏற்றுமதியாளர்களிடமிருந்து பெறுவதிலான சிரமத்தைத் தடுப்பதற்கு அதிகாரசபைக்கு தற்போதுள்ள அதிகாரத்தை முறைப்படி செயற்படுத்துதல்.	எதிர்காலத்தில் ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி உரிமம் ஒன்றை அறிமுகப்படுத்த உள்ளதுடன் அவ் உரிமத்தை ஆண்டுதோறும் புதுப்பிக்கையில் அந்நியச் செலாவணி அனுப்பும் வருமானத்தை வெளியிட வேண்டும் எனும் நிபந்தனை விதிக்கப்பட உள்ளது. இது தொடர்பான தொடர்புடைய அறிக்கை 2025.07.23 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 22)
14	**16**	**பயிற்சி பெற்ற அதிகாரிகள் மற்றும் பயிற்சித் திட்டங்களுக்கான தேவைப்பாடு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு**		
		I	ஆய்வகத்தில் பணிபுரியும் இரத்தினவியலாளர்களுக்கு Fellowship of Gemological Association (FGA) Gemological Institute of America (GIA) போன்ற டிப்ளோமாக்கள் மற்றும் விசேட வெளிநாட்டு ஆய்வகத்தில் பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.	இரத்தினக்கல் ஆய்வகத்தில் பணிபுரியும் 16 இரத்தினவியலாளர்களில், நான்கு பேர் தற்போது FGA உயர் டிப்ளோமாவைப் பெற்றுள்ளனர். மேலும் இரண்டு அதிகாரிகள் FGA டிப்ளோமாவைத் தொடர்கின்றனர். இதற்காக 2025 பட்ஜெட்டில் இருந்து 3 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. ஐந்து அதிகாரிகள் தகுதிகாண் காலத்தில் இருப்பதால், அவர்களின் தகுதிகாண் காலம் முடிந்ததும் FGA பாடநெறிக்கான நிதியுதவியை வழங்குவதற்கான நடவடிக்கையை அதிகாரசபை எடுப்பதற்கு உள்ளது.

15	**17**	**510 கிலோ கிராம் இடையுள்ள "ர.்.ப் சபையர் கிளஸ்டர்" இரத்தினக்கல் பாஷாண** **பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு**		
		I.	இதுபோன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.	ஏற்றுமதிக்காக வழங்கப்படும் இரத்தினக்கல் குவியல் படிவங்கள் அல்லது அரும்பொருட்காட்சியகப் பொருட்கள் பல்வேறு ஆக்க அடிப்படையில் மதிப்பிடப்படுவதைத் தடுப்பதற்காக வழிகாட்டி ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் படி, எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. (இணைப்பு 23)
16	**19**	**அதிகாரசபையின் ஆய்வகத்தில் இருந்த FTIR இயந்திரங்கள் இரண்டும் செயற்படாமை** **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும்**		
		I	தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் இரத்தினபுரி அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ள FTIR இயந்திரத்தின் ஒரு பகுதியாக இன்மை தொடர்பாக அமைச்சு மட்டத்தில் ஓர் சுயாதீனமான குழு ஒன்று நியமிக்கப்பட்டு முறையான விசாரணை ஒன்றை நடத்தி பொறுப்பு வாய்ந்த அனைத்து உத்தியோகத்தர்களையும் இனங்கண்டு தேவையான தொடர்நடவடிக்கைகளை	தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் இரத்தினபுரி அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ள FTIR இயந்திரத்தின் ஒரு பகுதி இன்மை தொடர்பாக சுயாதீனமான ஓர் விசாரணையை நடத்துவதற்கு 2025.03.19 ஆம் திகதி 03 உறுப்பினர்களைக் கொண்ட ஓர் குழு நியமிக்கப்பட்டது. (இணைப்பு 24) தொடர்புடைய குழு அறிக்கை 2025.05.29 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 25)

			மேற்கொண்டு அது தொடர்பான ஓர் அறிக்கையை ஒரு மாதத்திற்குள் (2025.04.05 ஆம் திகதிக்கு முன்னர்) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.	குழு அறிக்கையின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் படி தேவையான தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்காக 2025.05.28 ஆம் திகதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு 26)
		II.	குறித்த இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு செயற்படுத்துதல்.	குறித்த குழு அறிக்கையின் மூலம் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் படி, FTIR இயந்திரம் விளைவற்று உள்ளமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை நிர்ணயிப்பதற்காக ஆரம்ப விசாரணைகளை நடத்துவதற்காக சுயாதீனமான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (இணைப்பு 27) குறித்த இயந்திரத்தின் மூலம் சான்றிழ்கள் வழங்கப்படுவதற்காக இயந்திரத்தை துல்லியமானச் செயற்படுத்த வேண்டும் (fine tune) என ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இதற்காக தொழிநுட்ப பரிந்துரைகளும் பெறப்பட்டுள்ளன. இதன்படி, இதுவரையில் குறித்த தொழிநுட்ப திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தொழிநுட்பப் பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (இணைப்பு 28)

17	**20**	**இரத்தினக்கல் துறையில் ஒழுங்குமுறைகள் மற்றும் அனுமதிப்பத்திர வழங்கல் நடைமுறை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு**		
		I	இம் மேன்முறையீட்டு அதிகாரம் அமைச்சின் செயலாளருக்கு தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளும் தேவைப்பாடு தொடர்பாக சட்டத் திருத்தத்தின் போது மீள்பரிசீலனை செய்தல்.	அரசாங்கத்திற்குச் சொந்தமான வணிக சார்பற்ற நிறுவனங்கள் குறித்த மீளாய்வு அறிக்கையை சமர்ப்பித்தல் என்ற தலைப்பில் உள்ள 2025 மார்ச் 25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மான இல. அமப/25/0288/802/005 இன் படி நிறுவனங்களை மறுசீரமைக்கும் செயற்பாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டத் திருத்தத்தில், தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு உரித்தாக அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, சட்டத்தைத் திருத்துவதற்குத் தேவையான தொடர் நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 2025.07.14 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 01)
		II.	உரிய செயற்பணி மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தின் போது இது தொடர்பான ஓர் அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.	
			பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும்	
		III	இரத்தினக்கல் அகழ்விற்கான அனுமதிப்பத்திர வழங்கல் 100% துல்லியமாக மேற்கொள்ளப்படுவதற்கும் பொது மக்களின் முறைப்பாடுகள், எதிர்ப்புகளைக் குறைப்பதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு இது தொடரடபான ஓர் அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு	மேற்கண்டவாறு நடவடிக்கை எடுப்பதாக 2025.07.14 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 02) இது தொடர்பான விரிவான ஓர் அறிக்கை 2025.07.23 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 29)

			பிரதிகளுடன் குழுவிற்கு 01 மாதத்திற்குள் சமர்ப்பித்தல்.	சுட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.
		IV	இது தொடர்பாக சகல ஏற்பாடுகளும் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்ட திருத்தத்தின் போது உள்ளடக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தின் போது இது தொடரடபான ஓர் அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பித்தல்.	
18	**21**	**ஹெரனியாவக்க இரத்தினக்கல் சுரங்கத்தை அகற்றுவதற்கான செயற்திட்டம்** **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு**		
		I.	ஹெரனியாவக்க இரத்தினக்கல் சுரங்கச் செயற்திட்டத்திற்கான ஒப்பந்தம் மற்றும் ஒப்பந்தங்களின் நீட்டிப்பு ஆகியவை அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி சட்டப்பூர்வமாகவும் முறையாகவும் செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக அனைத்து விடயங்கள் தொடர்பிலுமான ஓர் அறிக்கை 01	ஹெரனியாவக்க இரத்தினக்கல் சுரங்கச் செயற்திட்டத்திற்கான ஒப்பந்தம் தொடர்பான பிரச்சனைக்கு உரிய விசாரணைக்காக 2025.05.08 ஆம் திகதி 05 அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 30) குழுத் தலைவரால் விசாரணைக்காக 2025.07.04 ஆம் திகதி 02 மாதகாலம் மேலதிக காலத்தை வழங்குமாறு

			மாதத்திற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பித்தல்.	மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க அறிக்கையை வழங்குவதற்கான திகதி 2025.09.04 வரை காலம் வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு 31) அந்த தகவல் 2025.07.14 ஆம் திகதி குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 32)
		II.	2024.01.31 அன்றைய பணிப்பாளர் சபைப் பத்திரம் 2426 இன் மூலம் வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தின் படி குறித்த ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை தலைமை அலுவலகத்திற்கு வருமாறு 2024.04.08 அன்று குறித்த லோட்டஸ் இன்டர்நேஷனல் டிரேட் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நீண்ட காலமாக குறித்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடாதிருந்தமை தொடர்பாக உள்ளக விசாரணையை நடத்தி, இது தொடர்பாக பொறுப்பான அனைத்து அதிகாரிகள் மீதும் தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு அது குறித்த அறிக்கையை 01 மாதத்திற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பித்தல்.	
		III	இந்தச் செயற்திட்டத்தின் கீழ் சமுர்த்தி சங்கங்களுக்கு உரித்தான 25% நலன்	

			செலவுகளை ஏற்கும் தரப்பினருக்கு/தனிநபரின் பெயரில் காசோலைகளை வழங்குவதற்காக அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறித்து பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய அறிக்கை ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் ஒரு மாதத்திற்குள் குழுவிற்கு சமர்ப்பித்தல்.		
			1.	இந்தக் கொடுப்பனவுகளை அங்கீகரித்த, பரிந்துரைத்த, சான்றளித்த, அங்கீகரித்த மற்றும் செலுத்திய அதிகாரிகள் பற்றிய தகவல்கள்,	
			2.	இக் கொடுப்பனவுகளுக்காக தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைத் தலைவரின் அங்கீகாரம் உள்ளதா என,	
			3.	இவ்வாறு தனிநபரின் பெயருக்கு காசோலைகளை வழங்குவது நிதிப் பிரமாண மீறல் என கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து அது வரையில் தனிநபரின் பெயரில் விநியோகிக்கப்பட்டிருந்த காசோலைகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக,	

			4.	உரிய தொகை குறித்த தனி நபர் பெயரில் காசோலையைப் பெற்ற நபரிடமிருந்து முறைப்படி குறித்த சமுர்த்தி நலனாளிக்கு கிடைக்கப்பெற்றமை குறித்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா எனவும் அது மேலும் உறுதிப்படுத்தப்படுவதற்கு விசாரணை ஒன்றை நடாத்தி அதன் அறிக்கை,	
			5.	இத்தகைய தவறுகள் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையில் மீள ஏற்படாதிருப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக,	
			6.	இது தொடர்பாக குறித்த தவறைப் புரிந்த அதிகாரிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட மற்றும் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக	
			7.	இந்தச் செயற்பாடு தொடர்பாக பெறப்பட்ட புகார்கள் மற்றும் ஏற்பட்ட அனைத்து ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்துதல்.	

		கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு		
		IV	ஹெரனியாவக்க இரத்தினக்கல் சுரங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாக உடனடியாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் பாதுகாப்பிற்கு நிலவும் தடைகளை தொடர்பாக 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளல். அது தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை 01 மாதத்திற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பித்தல்.	
		கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் (சட்டம்) இற்கும்		.
		V	அதிகாரசபையால் உரிமங்களை வழங்குவதற்கு முன், ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன், கேள்வி விலைகளைக் கோருவதற்கு முன், செய்தித்தாள் விளம்பரங்களை வெளியிடுவதற்கு முன், குறித்த உரிமங்கள், விளம்பரங்கள் மற்றும் வரைவு ஒப்பந்தங்களை அதிகாரசபையின் சட்டப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டு அவற்றின் சட்டப்பூர்வத்தன்மையை குறித்து	

			ஆய்வு செய்வதற்கு முறையான நடைமுறைகளைத் தயாரித்தல், குறித்த பொறுப்புவாய்ந்த அதிகாரிகளுக்கு அந்தக் கடமைகளை ஒப்படைப்பதற்கும், அந் நடவடிக்கைகளை முறைப்படி மேற்கொள்வதற்கும், இது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கும், தொடர்புடைய செயல்முறையைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்கும், இது தொடர்பான பதிவுகளை சரியான வடிவத்தில் பராமரிப்பதற்கும்.	
		VI	அவ்வாறு தயாரிக்கப்பட்ட முறையான வழிமுறையை தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் ஒரு மாதத்திற்குள் சமர்ப்பித்தல். அதன் தொடர்ச்சியான செயற்பாடு குறித்து ஆண்டுதோறும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் . சமர்ப்பித்தல்.	குழுவின் பரிந்துரைகளின் பேரில் ஹரனியாவக செயற்திட்டம் தொடரடபாக விசாரிப்பதற்கு ஒரு சுயாதீன குழு நியமிக்கப்பட்டுள்ளதால், அக் குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டதை அடுத்து அதிகாரசபைக்கு அரசிற்குரிய பங்கைத் தக்க வைத்துக்கொண்டு செயற்திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான தற்போதைய சட்ட ஏற்பாடுகள் குறித்த சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொண்டு பணிப்பாளர்களின் அங்கீகாரத்தில் தொடர் நடவடிக்கை எடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பான விரிவான அறிக்கை 2025.07.23 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 33)

				அதிகாரசபையால் உரிமங்களை வழங்குவதற்கு முன், ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன், கேள்வி விலைகளைக் கோருவதற்கு முன், செய்தித்தாள் விளம்பரங்களை வெளியிடுவதற்கு முன் செயற்பட வேண்டிய விதம் குறித்து உள்ளகச் சுற்றறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த சுற்றறிக்கையின் மூலம் இதற்கு பொறுப்பான அதிகாரிகளை நியமிப்பதற்கும் கடமைகளை ஒதுக்குவதற்கும் தொடர்புடைய செயல்முறையின் பதிவுகளை தொடர்ந்து வைத்திருப்பதற்கும் ஒரு படிவம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிக்கை 2025.07.23 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 34)
19	**24**	**2024.07.18 அன்று பாரடைஸ் குளத்தின் நில ஏலத்தை இரத்து செய்தல்** **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு:**		
		I.	இந்த இரத்தினக் காணி ஏலத்தை நிறுத்துவதற்காக அமைச்சரவை தீர்மானம் உள்ளதா என்பது தொடர்பாக ஆராய்ந்து அதனை 01 மாதத்திற்குள் குழுவிற்கும்	குறித்த விடயம் தொடர்பாக அமைச்சரவை தீர்மானம் கிடைக்கப்பெறவில்லை என 2025.05.23 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 35)

			கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.	
20	**25**	**சட்டவிரோத இரத்தின அகழ்வைத் தடுத்தல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு:**		
		I	அங்கீகரிக்கப்படாத இரத்தின அகழ்வு மற்றும் வழங்கப்பட்ட உரிமங்களின் நிபந்தன மீறல்கள் தொடர்பாக தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் அமுலாக்கல் பிரிவுகளை வலுப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கும், இது தொடர்பான விரிவான அறிக்கையை 01 மாதத்திற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.	சட்டவிரோத இரத்தின அகழ்வைக் கட்டுப்படுத்தவும் உரிமங்களின் நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் சுரங்க அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது குறித்து ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக பிராந்திய அலுவலக மட்டத்தில் சுற்றிவளைப்புக் குழுக்களைச் செயல்படுத்தியுள்ளதுடன் இந்த நடைமுறையை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளைக் கொண்ட அறிக்கை 2025.07.23 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 36)
21	**26**	**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைக்கு ஓர் கட்டிடத்தை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்** **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும்:**		
		I	சகல அரசாங்க நிறுவனங்களும் வாடகை அடிப்படையில் உள்ள கட்டிடங்களில்	சகல அரசாங்க நிறுவனங்களும் வாடகை அடிப்படையில் உள்ள கட்டிடங்களில் இருந்து அகற்றப்பட்டு அரச

			இருந்து அகற்றப்பட்டு அரச கட்டிடங்களில் ஸ்தாபிக்கப்படுவதற்காக தற்போதைய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக கவனம் செலுத்துதல்.	கட்டிடங்களில் ஸ்தாபிக்கப்படுவதற்காக கவனம் செலுத்தி அரசாங்க நிறுவனமான பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் செயற்படும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்கு 2025.11.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இடமாற்றம் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பான பணிப்பாளர் சபை அங்கீகாரம் இதுவரையிலும் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
		II	பழைய கட்டிடத்தை கூடிய விரைவில் திருத்தம் செய்து மீள அக் கட்டிடத்தைப் பயன்படுத்தத் தேவையான அனைத்து பணிகளையும் மேற்கொண்டு இதற்கான காலவரையறையை நிர்ணயித்தல்.	இது தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிக்கப்பட உள்ளது.
		III	சம்பந்தப்பட்ட ஹோட்டல் செயற்திட்டத்திலிருந்து செலுத்துவதற்கு உடன்பட்ட மாதாந்தக் கொடுப்பனவு ரூபா 03 மில்லியனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.	
		IV	தேசிய இரத்தினக் கல், ஆபரண அதிகாரசபையை பழைய கட்டிடத்தில் நிறுவுவதற்குத் தேவையான பணிகளை மேற்கொண்டவாறு 2025.08.31 ஆம் திகதி	

			தற்போது அலுவலகம் இயங்கும் கட்டிடத்திற்கு உரிய குத்தகை உடன்படிக்கை காலாவதியாக முன், தற்போதுள்ள அனைத்து நிலைகளையும் கருத்தில் கொண்டு (பழைய கட்டிடத்தில் அலுவலகம் நிறுவக்கூடிய திகதி, புதிய கட்டிடத்தைக் கண்டுபிடிக்க எடுக்கும் காலம், செலவு, அலுவலக உபகரணங்கள், ஆய்வக உபகரணங்களைக் கொண்டு செல்வதற்கான செலவு, ...) மிகவும் பொருத்தமான தீர்மானத்தை விரைவாக எடுத்தல் வேண்டும்.	
		V	இத்தகைய பாரிய சிக்கனமற்ற செலவினத்தை ஏற்படுத்துவதற்கு தேவையான சுற்றுச்சூழலை ஏற்படுத்திய, பொறுப்புவாய்ந்த சகல உத்தியோகத்தர்களுக்கும் எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.	இதற்குப் பொறுப்பான அதிகாரிகளை நிர்ணயிப்பதற்காக ஆரம்ப விசாரணைகள் நடத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இணைப்பு 37)
		VI	இச் சகல பரிந்துரைகளும் செயற்படுத்தப்பட்டு இது தொடர்பான ஓர் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் 01 மாதத்திற்குள் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.	இது தொடர்பான குறித்த அறிக்கை 2025.07.23 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 38)

22	**28**		**தாய்லாந்து சுற்றுலா** **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு:**	
		I	இந்த சுற்றுலாவிற்கு உரிய பணிப்பாளர் சபையின் ஆவணங்களையும் பணிப்பாளர் சபையின் ஒப்புதலையும் 02 கிழமைகளுக்குள் குழுவிற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பித்தல்.	இது தொடர்பான குறித்த அறிக்கை 2025.07.23 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 39)
23	**31**	**கலந்துரையாடப்படுவதற்கும் பரிந்துரை வழங்கப்பட இயலாது போன விடயங்கள்** **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு:**		
		I	2023 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2025.03.05 ஆம் திகதியும் 2025.03.27 ஆம் திகதியும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவால் கலந்துரையாடப்பட்டு வெவ்வேறாக பரிந்துரைகள் வழங்கப்படாத சகல கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு ஒவ்வொரு விடயத்திற்காகவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இது தொடர்பாக ஓர் அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு	2025.03.05 ஆம் திகதியும் 2025.03.27 ஆம் திகதியும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவால் கலந்துரையாடப்பட்டு வெவ்வேறாக பரிந்துரைகள் வழங்கப்படாத சகல கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பான அறிக்கை 2025.07.14 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதிகளுடன் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 40)

			பிரதிகளுடன் குழுவிற்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.	

நவீன் சூரியஆராச்சி
தலைவைர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்
தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

ஜே.எம்.திலகா ஜயசுந்தர
செயலாளர்
கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைத் தலைவரால் எடுக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பரிந்துரை செய்வதுடன் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் தொடர்பாக தனிப்பட்ட ரீதியாக கவனம் செலுத்தி அவற்றைச் சீராக்குமாறு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜே.எம்.திலகா ஜயசுந்தர
செயலாளர்
கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு

<u>அமைச்சரின் பரிந்துரை மற்றும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை</u>

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவால் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு அக் குறைபாடுகளைச் சீராக்கிக்கொள்வதற்கும் மீள ஏற்படாத வகையிலும் தேவையான

நடவடிக்கை எடுக்குமாறு என்னால் அமைச்சின் செயலாளருக்கும் நிறுவனத் தலைவருக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந் நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டின் போது உயர்ந்த நிலையில் எய்துவதற்கு எதிர்பார்க்கின்றேன்.

சுனில் ஹந்துன்னெத்தி (பா.உ.)
கௌரவ அமைச்சர்
கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு